**தலைப்பு 314 – தென் மாகாண சபை - 2025**

---

**1. தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் செயற்பணி**

**1.1 தூரநோக்கு**

நடைமுறையில் அர்த்தமுள்ள நல்லாட்சி மூலம் ஒரு வளமான தென் மாகாணம்

**1.2 பணிக்கூற்று**

தென் மாகாணத்தில் நிலவும் மனித, நிதி மற்றும் பௌதீக வள முகாமைத்துவ எண்ணக்கருக்களின் அடிப்படையில் செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் செயற்படுவதன் மூலம் மாகாணத்தின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை உயர் மட்டத்திற்கு கொண்டுவருதல் மற்றும் தேசிய பொருளாதாரத்திற்கு அதிக பங்களிப்பை வழங்குதல்.

**1.3 செயற்பணி**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பணிகள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுதல்.

**2. கணக்குகள்**

**2.1 நிதிக்கூற்றுக்கள்**
**மொத்த நிதியேற்பாடும் சேமிப்பும்**

தென் மாகாண சபைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த நிதிஏற்பாடு ரூபா 70,150.55 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அந்த நிதிஏற்பாட்டில் ரூபா 68,380.97 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிஏற்பாட்டின் பயன்பாடு தொடர்பான தகவல்கள்**

| செலவின விடயம் | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | கட்டுநிதி கிடைக்காத அளவு | கட்டுநிதி கிடைக்காத அளவு தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| மீண்டெழுபவை | 61,517.00 | 61,016.65 | 500.35 | 0.81 |
| மூலதனம் | 8,633.55 | 7,364.32 | 1,269.23 | 14 |
| மொத்தம் | 70,150.55 | 68,380.97 | 1,769.58 | |

**3. கணக்காய்வு அவதானிப்புக்கள்**

தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதிஏற்பாடுகள் மாகாண சபையினால் மாகாண சபை நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது. மாகாண சபை நிதியம் கணக்காய்வு செய்யப்பட்டு அது தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.